REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 10 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 293 | December 10,Thursday, 2020 | 24பக்கங்கள் | 30/-

வீட்டிலிருந்தவாறு மொபிடெல் உடன் இணைந்து வேலை செய்யுங்கள், கல்வி பயிலுங்கள்
25GB ரூபா. 150/-
+ வரிகள்
செயற்படுத்துவதற்கு அழையுங்கள் #170#
*விசேடமாக தெரிவு செய்யப்பட்ட பிரீபேபோம்களுக்கு மட்டுமே
TRC/M/Promo/20/02
Sri Lanka Telecom Mobitel

ஊழல் என்பது அபிவிருத்திக்கு மிகப் பெரிய தடையாகும்

இல்லாதொழிக்க நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

ஊழல் லஞ்சாரத்திலிருந்து எமது நாட்டை விடுவித்து எமது அடுத்த தலைமுறையினருக்கு ஒரு சிறந்த தேசத்தை பரிசளிப்பதற்கு ஒன்றுபடுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

2020 டிசம்பர் 9 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது....

ஊழல் என்பது அபிவிருத்திக்கு மிகப்பெரிய தடையாகும்.

ஊழலானது நிறுவனங்கள் அவற்றின் அதிகபட்ச திறனை அடைவதைத் தடுத்து இறுதியில் ஒரு நாட்டின் வளர்ச்சியையே தடுத்துவிடுகிறது. கண்காணிப்பு பொறிமுறைகளில் உள்ள குறைபாடுகளின் காரணமாகத் தேவையற்ற 06

பிணை வழங்கப்படக் கூடியவர்களும் அடைத்து வைப்பு

சிறைகளில் நெருக்கடி நிலைக்கு சட்டத்திலுள்ள பலவீனமே காரணம்

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

சிறைச்சாலைகளில் காணப்படும் கடுமையான நெருக்கடிகளுக்கு பிரதான காரணம் நீதிமன்றங்களினால் பிணை வழங்கப்படக் கூடியவர்களுக்கு பிணை வழங்காது சிறைச்சாலைகளில் அடைக்கப்படுவதே காரணமென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் நீதி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறைச்சாலைகளில் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. பிணை வழங்கக் கூடியவர்களுக்கு பிணை வழங்காது 06

பேலியகொடை புதிய மெனிங் சந்தை திங்கட்கிழமை திறப்பு

உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு பசில் பணிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பேலியகொடை மெனிங் சந்தை எதிர்வரும் திங்கட்கிழமை திறக்கப்பட உள்ளது.

மெனிங் சந்தையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

சுகாதாரத்துறையினர் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மெனிங் சந்தையின் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு அவர் அந்த அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

நேற்றைய தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற விசேட பேச்சுவார்த்தையின்போதே அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

அதன்போது மேலும் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ;

பேலியகொடை மீன் சந்தை மற்றும் மெனிங் சந்தை 06

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து

பிரதமரை சந்திக்க தமிழ் எம்.பிக்கள்

கோரிக்கை மகஜர் ஒன்றையும் கையளித்த

லோரன் செல்வ

தமிழ் அரசிய கைதி விடுதலை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தமிழ் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து சிறையில் இருக்கும் 80இற்கும் மேற்பட்ட கைதிகளை விடுதலை செய்யக் கோரியே இந்த சந்திப்பு 06

இடர் முகாமைத்துவ அமைச்சு நிதி ஒதுக்கீடு;

கொரோனாவால் மரணிப்போரது ...டங்கு அரச செலவில்

...பய அறிவுறுத்தல்

...ர், சுகாதார தரப்பினருக்கு ...திபதி கோட்டாபய ராஜ... பணித்துள்ளதாக தெரி...கப்பட்டுள்ளது. ...தற்கமைய , சவப்பெட்டி... களையும் இலவசமாக வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். மேலும், இனம், மதம் பேத... மின்றி சகலருக்கும் 06

...ா மரண சடலங்களை பொறுப்பேற்க மறுக்கும் உறவினர்கள்

19 சடலங்கள் அநாதரவான நிலையில் பிரேத அறையில்

நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த 19 பேரின் சடலங்கள் நேற்று மலையாகும் போதும், கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவிக்கின்றனர். இந்த சடலங்கள் பல நாட்களாக அங்கு வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டும் சுகாதார தரப்பு, குறித்த பிரச்சினைக்கு அரசாங்கம் உரிய தீர்வினை வழங்கவில்லை எனவும் தெரிவிக்கின்றது. இந்த நிலையில் 06 உறவினர்கள்

மாடி வீடு, தோட்ட குடியிருப்பு;

பொதுமக்களுக்கு விடுக்கும் கோரிக்கை

கொரோனா தொற்றை தடுக்கும் நடவடிக்கைக்கு மிகவும் பொறுமையுடன் ஒத்துழைப்பை வழங்குமாறு மாடி குடியிருப்பு மற்றும் தோட்ட பகுதிகளில் தனிமைப்படுத்த லுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களிடம் பொலிஸார் 06

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிகள் இன்று முதல் ஆரம்பம்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் இன்று முதல் அவர்களின் பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக நிமல் ஜீ புஞ்சிஹேவா நியமிக்கப்பட்டுள்ளதோடு எம். எம். மொஹமட் , எஸ். பி. திவாரத்ன, கே. பி. பி. பத்திரண, மற்றும் ஜீவன் தியாகராஜா ஆகியோர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் 06

இலங்கை நீதி பொறிமுறை நம்பிக்கை தருவதாக இல்லை

சர்வதேச விசாரணையை கோர காரணம் இதுவே

இலங்கையின் நீதிப் பொறிமுறையில் நம்பிக்கையிழந்த காரணத்தாலேயே, சர்வதேச விசாரணையைக் கேட்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் நீதி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே 06

கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகர் திரேந்திர சிங் மூன்று வருடகாலம் தமது சேவையை நிறைவு செய்து நாடு திரும்பவுள்ள நிலையில் நேற்று ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோது... அவரது காலப்பகுதியில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்து ஆளுநர். இந்த சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்றையும் உயர்ஸ்தானிகருக்கு அன்பளிப்புச் செய்தார். படம்: இக்பால் அலி

கொழும்பு தேசிய வைத்தியசாலையின்

சமையலறையில் பணியாற்றிய 14 பேருக்கு கொரோனா

கொழும்பு தேசிய வைத்

நல்லாட்சியில் நீதித்துறை சுயாதீனமாகவே இருந்தது

சபையில் தலதா அத்துகோரல எம். பி உரை

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

2021 வரவு – செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பு இன்று

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்